ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020 ஏப்பிறல் 16 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 மாச்சு

**கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 30.0**

2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 23.6 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

**தயாரிப்பு நடவடிக்கைகள் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலின் பாதகமான தாக்கங்களினால் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது.** கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2020 பெப்புருவரியிலிருந்து 23.6 சுட்டெண் புள்ளிகள் வீழ்ச்சியுடன் அனைத்து காலப்பகுதிக்குமான தாழ்ந்தளவு 30.0 சுட்டெண் பெறுமதியினை 2020 மாச்சில் பதிவுசெய்திருந்தது. தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணிலான வீழ்ச்சியானது, பிரதானமாக கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்களான உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு சுருக்கத்தினால் உந்தப்பட்டதுடன் இலங்கை தயாரிப்பு துறையில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) இன் முக்கியத்துவத்தினையும் பிரதிபலிக்கின்றது.

உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிற்கு 2020 மாச்சின் நடுப்பகுதியிலிருந்து ஊரடங்குச் சட்டத்தினால் தயாரிப்பு நிறுவனங்கள் மூடப்பட்டதே காரணமாகும். மேலும், நிறுவனங்களை மூடுதல் மற்றும் உற்பத்தி செயன்முறையை நிறுத்துதல் என்பவற்றுக்கு இசைந்துசெல்லும் விதத்தில் புதிய கட்டளைகளும் கொள்வனவுகளின் இருப்பும் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது. மேலும், குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் போன்ற ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளிலிருந்து மாச்சு ஆரம்பத்தில் கிடைக்கப்பெற்ற கட்டளைகள் அந்த நாடுகளில் வைரஸ் பரவலினை தொடர்ந்து இரத்துச்செய்யப்பட்டன.

நீட்சியடைகின்ற நிரம்பலாளர்களின் வழங்கல் நேரமானது வழமையாக மூலப் பொருட்களுக்காக அதிகரித்த கேள்வியினைச் சுட்டிக்காட்டும் வேளையில், மாச்சில் அதிகரித்த நிரம்பலர்களின் வழங்கல் நேரமானது கொரோனா வைரஸ் (கொவிட் - 19) உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலின் தாக்கத்தினால் தாமதமாகிய கப்பல் சரக்கேற்றுதல் மற்றும் உள்நாட்டு பொருட்கள் போக்குவரத்தின் தாமதமே காரணமாகும்.

| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.6** | **30.0** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| | | கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 51.1 | 18.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| உற்பத்தி | 54.8 | 5.2 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 47.3 | 44.8 | - | சுருக்கமடைகின்றது உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 52.2 | 12.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 66.1 | 85.8 | + | விரிவடைதல் உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இந்த அபிவிருத்திகளுக்கு இசைந்துசெல்லும் விதத்தில், 2020 மாச்சு மாதகாலப்பகுதியில் ஒரு ஒட்டுமொத்த சுருக்கத்தினை தயாரிப்பு நடவடிக்கைகள் பதிவுசெய்தன.

தயாரிப்பாளர்கள், கொரோனா (கொவிட்-19) வெளித்தாக்கமானது உலகளாவிய வழங்கல் சங்கிலி மற்றும் கேள்வியில் இடையூறுகளை விளைவிக்கும் என எச்சரிக்கைப்படுத்தினார்கள். அதன்படி, அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகள் மீதான ஒட்டுமொத்த எதிர்பார்ப்புகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 பெப்புருவரியிலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 மாச்சில் 47.6 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

2020 மாச்சில் சீனாவின் தயாரிப்பு கொ.மு.சு மேம்பட்டதுடன், இந்தியா சுருக்கமடைந்தது. ஐரோப்பிய வலயம், ஐ.அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ருஷியா மற்றும் என்பன எதிர்மறையான பிராந்தியத்தில் காணப்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிறல் 15, 2020 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2015 மேயிலிருந்தான பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் தாழ்ந்தளவிலான சுட்டெண் பெறுமதியான 32.0 சுட்டெண் புள்ளிகளைப் 2020 மாச்சில் பதிவுசெய்ததுடன்,** பொருளாதாரத்தின் பணிகள் துறையில் கொரோனா வைரஸ் (கொவிட்-19)இன் பாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. நிலுவையிலுள்ள பணிகள் தவிர ஏனைய அனைத்துப் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்களும் நிலையான 50.0 மட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவு கீழாக காணப்பட்டதுடன் பணிகள் நடவடிக்கைகளில் இந்த உலகளாவிய நோய்த்தொற்றின் பரந்துவிரிந்த தாக்கத்தினை குறிப்பிடுகின்றது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**32.0**

2020 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 18.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

உணவு விடுதிகள், போக்குவரத்து முகவர்கள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற சுற்றுலா துறையினை சார்ந்த பணிகளின் புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் பிரதானமாக வீழ்ச்சியடைந்தன. இதற்குமேலும், நாடு முடக்கப்பட்டதுடன் இசைந்து செல்கின்ற விதிக்கப்பட்ட உள்நாட்டு போக்குவரத்து தடைகள் மற்றும் சரக்கு கையாளுதலின் தாமதம் என்பன போக்குவரத்துத் துணைத் துறையில் வியாபார நடவடிக்கைகளின் மீது எதிர்மறையான தாக்கத்தினை விளைவித்தன. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் துறையில் கையிருப்புக்களின் கேள்வியில் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த கேள்வியானது ஊழியர்களின் கிடைப்பனவின்மை மற்றும் வழங்கல் வலைப்பின்னலில் காணப்படுகின்ற இடர்பாடுகள் காரணமாக பூர்த்திசெய்யப்பட முடியவில்லை. விருப்பப்படியான செலவு மற்றும் வருமானத்திலான குறைவு, இறக்குமதி தடைகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வருகைகளின் வீழ்ச்சியிலிருந்து உருவாகின்ற நுகர்வோர் கேள்வியில் எதிர்பார்க்கப்படுகின்ற வீழ்ச்சியினைப் பதிலிறுப்பாளர்கள் கருத்திற்கொள்கின்றமையினால் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் துணைச் சுட்டெண் 2020 மாச்சில் அனைத்து காலப்பகுதிக்குமான தாழ்ந்தளவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் என்பவற்றின் வீழ்ச்சியுடன் நிறுத்தப்பட்டுள்ள புதிய ஆட்சேர்ப்புகளுக்கு மத்தியிலும் ஒப்பந்தம் மற்றும் தற்காலிக தொழிலாளர்களின் தொடர்ச்சியின்மை காரணமாக பணிகள் துறையில் தொழில்நிலை தொடர்ந்தும் குறைவடைந்தது.

| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.2** | **32.0** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| **<u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u>** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 52.7 | 25.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| வியாபார நடவடிக்கைகள் | 53.8 | 17.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 46.2 | 34.8 | - | வீழ்ச்சி, உயர்ந்த வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 45.8 | 65.4 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 52.7 | 16.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேலும், 2020 மாச்சில் பணிகள் துறையின் நிலுவையிலுள்ள பணிகள் துணைச் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இதற்கு, நிதியியல் நடவடிக்கைகள், தொலைத்தொடர்பூட்டல், மனிதநலம் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கியமான வியாபார நடவடிக்கைகள் குறைந்தளவு எண்ணிக்கையிலான தொழிலாளர்களுடன் பணிபுரிவதே பிரதானமான காரணமாகும்.

***உலக தோற்றப்பாடு:***
***பணிகள் கொ.மு.சு***

கொரோனா வைரஸ் (கொவிட் - 19) உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினால் உலகளாவிய பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2020 பெப்புருவரியின் 47.1 சுட்டெண்ணிலிருந்து 2020 மாச்சில் 37.0 சுட்டெண்ணிற்கு வீழ்ச்சியடைந்து தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திற்கு நடுநிலையான 50.0 மட்டத்திற்கு கீழாக காணப்பட்டது..

ஐக்கிய அமெரிக்கா, சீனா, யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2020 மாச்சில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியன.

*(மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிறல் 15, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.